

# KAVIMUGI

INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH
A Peer - reviewed Scholarly BI Annual Journal
Half Yearly Research Journal | ISSN 2950-6611

## SEN NEXUS

**Dr.KAVISEN Academy | Book Write Now Hub |**
**SEN Arts & Cultural Forum &**
**ULAGA THAMIZHAN PATHIPPAGAM**
**Jointly Organized By**

## 3rd SEN Teachvision 2023
## International Multidisciplinary Symposium

**THEME**
**TEACHVISION - 2023**
**INTERNATIONAL CONFERENCE**
**"Shaping Education for a Brighter Future"**

**SEN NEXUS**

**Dr.KAVISEN Academy | Book Write Now Hub |**
**SEN Arts & Cultural Forum &**
**ULAGA THAMIZHAN PATHIPPAGAM**
**Jointly Organized By**

# 3rd SEN Teachvision 2023 International Multidisciplinary Symposium

**THEME**

## TEACHVISION - 2023 INTERNATIONAL CONFERENCE "Shaping Education for a Brighter Future"

கருப்பொருள்
2023 - "தொலைநோக்கு கற்பித்தல் கருத்தரங்கம் - ஒளிமயமான எதிர்காலத்திற்கான கல்வியை வடிவமைப்பது"

EDITOR-IN-CHIEF

DR.R.KAVITHA SENTHILNATHAN
DIRECTOR - SEN NEXUS
DR.KAVISEN ACADEMY | BOOK WRITE NOW HUB |
SEN ARTS & CULTURAL FORUM | SEN TRAINER'S TEAM

| S NO. | CONTENT | NAME | P NO |
|---|---|---|---|
| 1 | மெல்லக் களவாய்ப் பழங்கதையாய் புதினம் மார்க்சியப் பெண்ணியப் பார்வை | இளமுனைவர். பழ. கலைவாணி பாண்டியன் | 1-6 |
| 2 | தமிழிலக்கியங்களில் உணர்வெழுச்சிகள் | முனைவர் பெ.தமிழ்ச்செல்வி குணசேகரன் | 7-10 |
| 3 | தமிழிலக்கியங்களில் வணிகவியல் உத்திகள் | முனைவர்.பா.சரளாதேவி | 11-15 |
| 4 | தற்போதைய கல்வி முறை இப்படி இருக்க வேண்டும் என்று என் மனதில் உதித்தவைகள் | கோ.கலைப்பிரியா | 16-21 |
| 5 | Toward A Sustainable Future In Biology Teaching Innovations And Challenges | Dr. S. Nagaraj & Dr. D. Vasantharaja | 22-24 |
| 6 | மாணவரின் வெற்றிக்கு பெற்றோர் ஆசிரியர் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் | முனைவர் பெ. கலைச்செல்வி | 25-30 |
| 7 | Creating Awareness on the Utilization and Disposal of Plastic Waste in Kanniyakumari District | Dr. K. Vijayakumar | 31-33 |
| 8 | மாணவர்களின் வெற்றிக்காக பெற்றோர் ஆசிரியர் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் | Dr. அ. ஜமீலா | 34-36 |
| 9 | பழமொழி நானூறு உணர்த்தும் கல்வி | முனைவர் கா. ராஜகுமாரி | 37-39 |
| 10 | Innovation In Management Education | R. Kaliamoorthy | 40-42 |
| 11 | தமிழ்க்கல்வி கற்றல் கற்பித்தல் வடிவமைப்பு முறைகள் | முனைவர் வை.நம்பித்தாய் | 43-50 |
| 12 | Shaping Education for a Brighter Future in English Language | Prabhakar R | 51-53 |
| 13 | FROM A TO Z FUN AND EFFECTIVE ALPHABET ACTIVITIES FOR KINDERGARTENERS | V. Prabha | 54-59 |
| 14 | கல்விமுறைகளின் நோக்கும் போக்கும் | வா.அகல்யா | 60-63 |
| 15 | ஔவையார் எடுத்துரைக்கும் கல்விச் சிந்தனைகள் | திருமதி மு. பழனியம்மாள் | 64-67 |
| 16 | கற்றல் – கற்பித்தல் நெறி | முனைவர் ப.புஷ்பலதா | 68-70 |
| 17 | Teaching Feminism Mary Wollstonecraft's Maria, or The Wrongs of Woman | Marie Josephine Aruna | 71-73 |
| 18 | தமிழ் மொழியைக் கற்பிக்கும் திறன்கள் | முனைவர் நா. காயத்ரி | 74-77 |
| 19 | கற்றல் கற்பித்தலில் இசைத்தமிழ் அறிவும் தெளிவும் | முனைவர் இரா. வசந்தமாலை | 78-80 |
| 20 | Professional Development Of Teacher In Teaching And Teacher Education | MRS. S. Vanitha | 81-84 |
| 21 | எடுத்துரைப்பியல் நோக்கில் கபிலரின் அகப்பாடல்கள் கற்றல் முறை | முனைவர் க.இலட்சுமிதேவி | 85-89 |
| 22 | A Study On Home Adjustment And Academic Achievement Among Higher Secondary School Students | K.T.Poonthalir & Dr.T.S.Vimala | 90-94 |

# தமிழ் மொழியைக் கற்பிக்கும் திறன்கள்

முனைவர் நா. காயத்ரி

தமிழ்ப் பேராசிரியர், தாகூர் அரசு கலை & அறிவியல் கல்லூரி,

புதுச்சேரி 605 008. gayathripondicherry@gmail.com.

18

முன்னுரை

மனித இனத்தின் வளர்ச்சிக்கு மொழி இன்றியமையாததாக அமைந்துள்ளது. ஒரு மொழி கல்வி மொழியாக மாறுகின்றபோது, மொழியின் வளர்ச்சி மட்டுமின்றி அந்த மொழியைப் பேசும் இனத்தின் வளர்ச்சியும் மேம்படுத்துகிறது. மனிதனின் சிந்தனையை வளர்ப்பதும் சிந்தனையைத் தூண்டுவதும் அவனது தாய் மொழியாகும். தாய்மொழியில் சிந்தித்தால்தான் சிந்தனை ஓட்டம் தங்கு-தடை இன்றி செல்லும். மேலும், சிந்தனை ஓட்டத்தின் மூலமாக ஆய்வு உண்மைகள் வெளிப்படும். முதலில் மாணவர்கள் தாய் மொழியை பிழையின்றி எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்ளுதல் மிகவும் அவசியம்.

தமிழ் மொழியில் பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு, கேட்டல், எழுதுதல், வாசித்தல் ஆகியவை உள்ளடங்கியுள்ளன. மாணவர்கள் தமிழ் மொழியின் சிறப்பை அறிந்து, பயின்று பயன்பெறும் வகையில் அவர்களுக்கு கேட்டல் திறன், வாசிக்கும் திறன், ஒலி உச்சரிப்புத் திறன், இலக்கணப் பயிற்சி, கற்பதில் பின்பற்ற வேண்டிய திறன் மற்றும் கற்பிக்கும் சாதனங்கள் ஆகியவை பற்றிய தெளிவான சிந்தனை அவசியமாகிறது.

தமிழ் மொழி கற்பித்தலை எளிமையாக்குவதன் மூலம் மாணவர்களின் திறன்களை வெளிக்கொணர முடியும் என்பது இவ்வாய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

## கேட்கும் திறன்

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்

செல்வத்துள் எல்லாம் தலை" (குறள் 411)

[illegible] திருவள்ளுவர் கேட்கும் திறனை மிகவும் இன்றியமையாததாகவும் செல்வங்களுள் தலையாய [illegible]வும் குறிப்பிடுகிறார். ஒருவர் படிக்கும்போதும் பேசும் போதும் அதனை செவிமடுத்து கேட்பதே [illegible] வளர்ச்சிக்கு அடிப்படையானதாகும். ஆசிரியர்கள் வாசிக்கும் பொழுது மாணவனைத் [illegible]படுத்தி எளிமையான சொற்களைச் சொல்லும்போது அவன் செவிமடுத்து கேட்பான். மாணவர்களின் புரிதல் திறனுக்கு ஏற்ப பாடல்கள் பாடியோ அல்லது ஒரு சொல் சொல்லி அதற்கு [illegible] என்னவாக இருக்கும் என வினாக்களை எழுப்பியோ மாணவனை யோசிக்க செய்தல் [illegible].

ஆசிரியர்-மாணவர்களுக்கிடையே ஒரு தொடர் சங்கிலி பிணைப்பு இருந்தால்தான் கேட்டல் திறன் [illegible] என்பதில் ஐயமில்லை. கேட்கும் திறன் என்பது தனிப்பட்ட ஒருவரின் மனநிலை, விருப்பு-[illegible] ஆகியவற்றை பொருத்தும் அவரது திறமை அவரது உடல்-மன நிலையில் உள்ள [illegible] பொருத்தும் உள்ளது.


## [illegible] திறன்

[illegible] பாடத்திட்டத்தில் உள்ள பாடப் புத்தகத்தை மட்டும் படிக்கும் மாணவனை மற்ற [illegible] படிக்க சுவைப்பதற்குத் தூண்டுகோலாக ஆசிரியர் விளங்க வேண்டும். கதைப் புத்தகங்கள்,

# தமிழ் இலக்கிய மரபு - நாட்டுப்புற மரபு:

## மந்திரம் - சடங்கு - வழிபாடு - கடவுள் - சமயம் - தத்துவம்

(தொகுதி - 1)



போதிவனம்

# தமிழ் இலக்கிய மரபு - நாட்டுப்புற மரபு:

## மந்திரம் - சடங்கு - வழிபாடு - கடவுள் - சமயம் - தத்துவம்

(பன்னாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகள்)

(தொகுதி - 1)

பதிப்பாசிரியர்கள்
முனைவர் பி. பாலசுப்பிரமணியன்
திருமதி கி. மாலதி
திருமதி சு. பூங்கோதை
திருமதி செ. ரோஜாமணி
திருமதி ச. தமிழ்ச்செல்வி
செல்வி தா. சாலம்மாள்
திருமதி நா. குமுதா
திருமதி செ. சரசு
திருமதி வி. ஜெயபிரியா
திருமதி இரா. கஸ்தூரி
திருமதி அ. ஜெயந்தி
முனைவர் மா. கிருஷ்ணவேணி
திருமதி து. சுமதி
முனைவர் செ. கோமளா
திருமதி க. தேவிபாலா
செல்வி ம. சௌந்தர்யா
செல்வி பா. ரம்யா
செல்வி மு. சுவேதா

தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை
மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரி
வாணியம்பாடி - 635751.

போதிவனம்

| | | |
|---|---|---|
| Name of the Book | : | **Thamizh Ilakkiya Marabu - Naatupura Marabu** (Mandhiram - Sadangu - Vazhipaadu - Kadavul - Samayam - Thathuvam) |
| Authors | : | Dr. P. Balasubramanian<br>Tmt. S. Poonkothai, Tmt. S. Rojamani, Tmt. S. Thamizhselvi, Selvi T. Salammal, Tmt. N. Kumudha, Tmt. S. Sarasu, Tmt. V. Jayapriya, Tmt. R. Kasthuri, Tmt. A. Jayanthi, Dr. M. Krishnaveni, Tmt. T. Sumathi, Dr. S. Komala, Tmt. K. Devibala, Selvi M. Soundharya, Selvi P. Ramya, Selvi M. Swetha |
| Language | : | Tamil |
| First Edition | : | October, 2023 |
| Wrapper Design | : | Karuna Prasad |
| Publisher | : | BODHIVANAM<br>Ahmed Complex Ground Floor,<br>12/293, Royapettah High Road,<br>Royapettah, Chennai - 600 014, India.<br>Phone: 91 – 98414 50437,<br>Email: bodhivanam@gmail.com |
| Pages | : | 540 |
| ISBN | : | 978-81-965682-2-1 |
| Price | : | Rs. 580/- |

53. எட்டுத்தொகை அகநூல்களில் தனிமாந்தர்
உரையாடலில் கலைத்திறன் - வி. ஜெயபிரியா 408
54. வாழ்க்கை நெறியை உணர்த்தும்
திருமூலரின் தத்துவம் - ம. சௌந்தர்யா 415
55. தமிழ் இலக்கியத்தில் ‘பறை’
- முனைவர் கா. அன்பரசு 421
56. பண்டையத் தமிழர் திருமணமுறைகள்
- பா. ரம்யா 427
57. அறஇலக்கியங்கள் உணர்த்தும்
நிலையாமைச் சிந்தனைகள் - ப. சரஸ்வதி 438
58. அகநானூறு காட்டும் வழிபாடுகள்
- முனைவர் நா. காயத்ரி 445
59. கிறித்தவ வன்னியர்களின் நாட்டுப்புற
நம்பிக்கைகள் சடங்குகள்
- ஜே. பாஸ்கர் வேளாங்கண்ணி 455
60. தர்க்கா வழிபாடு - முனைவர் நா. குமாரி 463
60. தர்க்கா வழிபாடு - முனைவர் நா. குமாரி 463
61. தமிழ் இலக்கியங்களில் நாட்டுப்புற மக்களின்
இயற்கை வழிபாடு - முனைவர் சி. கல்பனா 471
62. புறநானூற்றில் பெண்கள் இயல்பு - செ.மைதிலி 481
63. ‘காணிக்கை’ சிறுகதை ஒரு பார்வை
- பெ. லதா, முனைவர் நா. குமாரி 486
64. ஏலாதியும் சமணக் கொள்கைகளும் - அ.நாகஜோதி 490
65. நாலும் இரண்டும் உணர்த்தும் இன்பம்
- முனைவர் கா. கிருஷ்ணமூர்த்தி 498
66. சங்க அக இலக்கியத்தில் சடங்குகள்
- ல. நிவேதா, சி. யசோதா 505
67. இலக்கியங்கள் உணர்த்தும் இல்வாழ்க்கை
மரபுகள் (வைரமுத்து - கருவாச்சி காவியம்)
- முனைவர் க. இரவி 510
68. இளம்பூரணர் உரையில் எட்டுத்தொகை
எடுத்துக்காட்டுகள் - ல. திலிப்குமார் 518
69. சங்க அக இலக்கியங்களில் வாழ்வியல் நெறிகள்
- சி. ஜனனி, முனைவர் கு. சிவப்பிரகாசம் 528
70. Kaaparaiyattam (Mugam Eduthu Aaduthal) - E. Vengadessin 535

# 58. அகநானூறு காட்டும் வழிபாடுகள்

முனைவர் நா. காயத்ரி
உதவி பேராசிரியர்,
தமிழ்த் துறை, தாகூர் அரசு கலை & அறிவியல் கல்லூரி,
(புதுச்சேரி)


## அறிமுகம்

சங்க கால இலக்கியங்கள் தமிழரின் சிறப்புகளையும் பெருமை களையும் இன்றும் உலகிற்கு பறைசாற்றி நிற்கின்றன. தமிழர் வாழ்வின் பண்பாடு, சமுதாய அமைப்பு, மன்னர்களின் வாழ்க்கை நிலை, போர் திறன், தொழில், சடங்குகள், நம்பிக்கைகள், கலைகள், வழிபாடுகள், மானுட வாழ்வியல் போன்றவற்றை தெளிவாக அறிந்துகொள்வதற்குரிய களஞ்சியமாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. இத்தகைய சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான அகநானூற்றில் இடம் பெற்றுள்ள வழிபாடுகள் குறித்து இக் கட்டுரை ஆராய்கிறது.

மனித வாழ்க்கையில் மிக முக்கியமான ஒன்றாக இறைவழிபாடு திகழ்கிறது. இயற்கையின் பாதிப்பிற்கு உட்பட்ட மனிதன் அவற்றின் தாக்குதலில் இருந்து தன்னை காப்பாற்றிக்கொள்ள முயன்ற நிலையில் கடவுள் கோட்பாடும் வழிபாடும் தோன்றியதை அறிய முடிகிறது. அச்ச உணர்வு அன்பாக மாற்றம் பெற்று காலப்போக்கில் அருளாக வளர்ந்தது. தொடக்க நிலையில், வீரர்களின் நினைவாக கற்கள் நிறுத்தப்பட்டு அவை நடுகற்கள் எனப் பெயர்பெற்று வணங்கப் பட்டன. காடு, மலை, சுனைகளில் உறையும் அணங்கு சக்திகளை மக்கள் வழிபட்டனர். இத்தகைய சக்திகளை அமைதிப்படுத்த அவற்றிற்கு பலியிட்டு வணங்கும் முறையும் காணப்பட்டது அறிய முடிகிறது பழந்தமிழரின் கடவுள் வழிபாட்டில் பூ, நெல், தினை போன்றவற்றைவைத்து வழிபட்டமை குறிப்பிடத்தக்கது. இல்லத்தில் அமைந்த தெய்வத்தை மாலை நேரத்தில் பெண்கள் விளக்கேற்றியும் மலர் தூவியும் வழிபட்டனர்.

## இறை வழிபாடுகள்

சங்க கால தமிழர்கள் தங்கள் வாழ்வியல் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு தெய்வங்களை வழிபட்டுவந்தனர். நானிலத்து மக்களும்



# பக்தி இலக்கியங்கள் ஆய்வுக்கோவை


பதிப்பாசிரியர்

முனைவர் வேல். கார்த்திகேயன்

முனைவர் வே. மகேஸ்வரி

நூல் பெயர் :
பக்தி இலக்கியங்கள்
ஆய்வுக் கோவை

பதிப்பாசிரியர்கள் :
முனைவர் வேல். கார்த்திகேயன்
முனைவர் வே. மகேஸ்வரி

முதற்பதிப்பு : மார்ச்சு, 2019

பொருள் :
ஆன்மிகக் கட்டுரைகள்

பக்கம் : 304

விலை : 250.00

ப.த.நூ.எ.: 978-81-941003-0-0

ஒளியச்சு :
கங்காராணி கணினியகம்
சென்னை-74.

அச்சிட்டோர் :
சீனிவாசா அச்சகம், சென்னை-14

வெளியீடு :
கங்காராணி பதிப்பகம்
மனை எண்.60, கதவு எண். 3/373,
தொல்காப்பியர் தெரு,
சண்முகா நகர், பொழிச்சலூர்,
சென்னை-600 074.
அலைபேசி : 98840 57267
மின்னஞ்சல் :
gangaaraanipathippagam@gmail.com
இணையதளம் :
www.gangaaraani.com

Title :
**BAKTHI ILAKKIYANGAL**
**AAIVU KOAVAI**

Editors :
**Dr. Vel. Karthikeyan**
**Dr. V. Maheswari**

Edition : March, 2019

Subject : Religious Essay

Pages : 304

Price : **250.00**

I.S.B.N. 978-81-941003-0-0

Typesetting :
**Gankarani Kaniniyagam**
Chennai-74.

Printed at :
**Srinivasa Achagam,** Chennai-14.

Publisher :
**Gangaaraani Pathippagam**
Plot No. 60, Door No. 3/373,
Tholkappiar St., Shanmugaa Nagar,
Pozhichalur, Chennai - 600 074.
Mobile : 98840 57267
E-mail :
gangaaraanipathippagam@gmail.com
Website : gangaaraani.com

## பொருளடக்கம்

1. கம்பரின் கடவுள் பக்தி
முனைவர் நயம்பு. அறிவுடைநம்பி 9

2. பக்தி வழிபாடு : அன்றும் இன்றும்
அருணாச்சலம் வேணுகோபாலன் 14

3. புதுச்சேரி - வீராம்பட்டினம் பகுதியைச் சுற்றியுள்ள கோயில்கள் ஓர் ஆய்வு
அ. அன்பு நிலவன் 19

4. தமிழை மீட்டுத் தந்த வள்ளலார்
கவிஞர் இராமதாஸ் காந்தி 24

5. வான் வலியால் வழிபறிப்பான் தமிழ்
முனைவர் அ. இலட்சுமிதத்தை 29

6. வைணவ இலக்கியப் பரவலுக்குக் கரந்தை தாமோதரனின் பங்களிப்பு
முனைவர் மு. இளங்கோவன் 34

7. திருநாவுக்கரசர் கையாண்ட யாப்பு வகைகள்
உஷா 39

8. திருநாவுக்கரசரின் வழிபாட்டு நெறிகள்
முனைவர் க. கண்ணன் 44

9. ஆண்டவனும் - ஆண்டவனும்
முனைவர் கே. இரா. கமலாமுருகன் 49

10. சைவ சித்தாந்தத்தில் வள்ளுவம்
செ. கயல்விழி 54

11. இஸ்லாம் மார்க்கப் பண்பாடு
முனைவர் கே.ஏ. கருணாநிதி 58

12. சந்தனக்குரவர்கள் அளித்த சாத்திரங்கள்
இரா. கவிதா 63

13. திருமந்திரத்தில் உவமையின் சிறப்பு
முனைவர் நா. காயத்திரி 68

14. உளவியல் பார்வையில் திருநாவுக்கரசரின் பக்திநெறி
முனைவர் பா. கார்த்திகேயன் 73

# 13. திருமந்திரத்தில் உவமையின் சிறப்பு

முனைவர் நா. காயத்ரி
துணைப்பேராசிரியர்,
தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
புதுச்சேரி.

உவமை என்ற சொல் பேச்சுவழக்கில் இயல்பாக அனைவராலும் கையாளப்படுகின்றது. 'பொருள் புலப்படுத்துதலும் கேட்டார்க்கு இன்பம் பயத்தலும் உவமையின் பயனாம்'என்று கூறுவார் பேராசிரியர். தொடக்கக் காலத்தில் உவமைப் பொருளைப் புலப்படுத்தமட்டுமே பயன்படுத்தப்பட்டது. பின்னரே உவமை ஓர் அணியாகி அதிலிருந்து பல்வேறு அணிகள் வளர்ச்சி அடைந்துள்ளமையை அறியமுடிகின்றது. எனவே உவமையை அணிகளின் தாய் எனலாம்.

சைவசித்தாந்த சாத்திரங்களுள் கூறப்படும் பதி,பசு,பாசமாகிய முப்பொருள் உண்மைகளையும் தொகுத்துக் கூறுகின்ற முதல் நூலாகிய திருமந்திரத்தில் அவற்றின் இயல்புகளையும் சிறப்புகளையும் விளக்குகின்ற இடங்களில் கையாளப்பட்டுள்ள உவமைகள் சிறப்பிடம் பெற்றுள்ளன.

பதி என்பது இறைவனைக் குறிக்கும் இறைவன் ஒருவனே என்பதால் 'ஏகன்'என்று புகழப்படுகின்றான். அவன் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கின்றான் என்பதைத் திருமூலர் கையாளுகிற உவமைநயம் மிகுந்தது.

***"கடங்கடந் தோறும் கதிரவன் தோன்றில்
அடங்கிட மூடில் அவற்றில் அடங்கான்
விடங்கொண்டகண்டனுமேவியகாயத்
தடங்கிடநின்றதும் அப்பரிசீரமே"*** (திருமந்திரம் - 1965)

பகலில் சூரியஒளியில் பல்வேறு குடங்களில் நீர் நிரப்பி வைத்தால் அக்குடங்கள்தோறும் சூரியன் வெவ்வேறாக முழுமை யாகத் தோற்றமளிப்பான். அங்ஙனம் தோன்றினும் கதிரவன் ஒருவனே. அவனை அவ்வக் குடத்துள் அடக்கிவிட முயன்று

# தமிழர் மாண்பு

(தேசிய ஆய்வுக் கருத்தரங்கக் கட்டுரைகள்)



புதுச்சேரிப் படைப்பாளர் இயக்கம்

# நூற்குறிப்பு



- நூல் : தமிழர் மாண்பு
- மொழி : தமிழ்
- வகை : கட்டுரை
- நூல் தொகுப்பு : பாவலர் ஆறு. செல்வன் 9894755985
- பதிப்பாசிரியர் : முனைவர் ஆ.விஜயராணி
- துணைப்பதிப்பாசிரியர்கள் : பேராசிரியர் க.கிருஷ்ணம்மாள், முனைவர் அன்னா. ஜெகன்
- முதல் பதிப்பு : 25.09. 2022
- வெளியீடு : புதுச்சேரிப் படைப்பாளர் இயக்கம்
- உரிமை : வெளியீட்டாளருக்கு
- நூலின்அளவு : 1/8 demi
- பக்கம் : 318
- தாள் : மேப்லித்தோ N.S. - 70 G.S.M.
- மேல் அட்டை : பல்வண்ண அட்டை - 300 G.S.M.
- மேல்அட்டை வடிவமைப்பு : ஜெயக்குமார்
- நூல் வடிவமைப்பு : க.சரவணன்

அச்சாக்கம் : யோகி பதிப்பகம். 65.,4வது குறுக்குத்தெரு, சக்திநகர் புதுச்சேரி -13 பேசி : 99947 25888

- ISBN No. : 978-81-954810-3-3
- விலை : உரூபாய் 500/-

15. இல்லறத்தில் தமிழனின் மாண்பு
பாவலர். கோ.கலியபெருமாள்
16. சங்க இலக்கியங்களில் தமிழரின் இல்லற
மாண்புகள் முனைவர் நா.காயத்ரி
17. கட்டடக் கலையில் தமிழனின் தொன்மை
பாவலர் வெ. கிருட்டினக்குமார்
18. பெண்புலவர்களின் வீரம்
பேராசிரியர் க.கிருஷ்ணம்மாள்
19. முல்லைத்திணையில் தமிழர் தொன்மைகள்
முனைவர் கோ. குணசேகர்
20. சாமி. சிதம்பரனார் வாழ்வும் தமிழ்ப் பணியும்
முனைவர் இரா. கோவலன்
21. அறிஞர்அண்ணாவின் பொங்கல் திருநாளில் தமிழர்
வாழ்வு - முனைவர் மு.கோவிந்தராசன்
22. திருமுருகாற்றுப்படையில் வழிபாடும்
நம்பிக்கைகளும் - ஆ. சந்திரகலா
23. முதுமொழிக் காஞ்சியில் மேலாண்மைச்
சிந்தனைகள் பாவலர் சுந்தர. சந்திரகுமரன்
24. நற்றிணைக் கூறும் தமிழரின் நம்பிக்கை - ஓர் ஆய்வு
முனைவர் வி. சரளா ஆறுமுகம்
25. இலக்கியங்களில் தமிழனின் தொன்மைச் சிறப்பு
முனைவர். பா.சரளாதேவி
26. திருக்குறல் வழியில் அறத்தில் தமிழர் மாண்பு
பாவலர் க.சரவணன்
27. ஐங்குறுநூற்றில் தமிழனின் தொன்மை
ஆய்வாளர் செ.சுரேஷ்குமார்
28. அறிவியலில் தமிழரின் தொன்மை - ஓர் ஆய்வு
தகடூர் தமிழ்க்கதிர்
29. பழந்தமிழ் இலக்கியத்தில் அறிவியல்
கோட்பாட்டுச் சிந்தனைகள்

# சங்க இலக்கியங்களில் தமிழரின் இல்லற மாண்புகள்



முனைவர் நா.காயத்ரி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
புதுச்சேரி - 8

சங்க காலத்தில் மக்கள் நிலத்தின் தன்மைக்கேற்றவாறு தங்களது வாழ்க்கைமுறையைக் கொண்டிருந்தனர். குறிப்பாக, காடும் காட்டைச் சார்ந்த இடத்தைக் முல்லை என்றும், மலையும் மலையைச் சார்ந்த இடத்தை குறிஞ்சி என்றும், வயலும் வயலைச் சார்ந்த இடத்தை மருதம் என்றும், கடலும் கடலைச் சார்ந்த பகுதியை நெய்தல் என்றும் பிரித்து அவ்வந்நிலத்தையொட்டியே வாழ்ந்து வந்தனர். இவ்வாறு நிலத்தையொட்டி வாழ்ந்த சங்காலத் தமிழர் மொழிக்கு மட்டும் இலக்கணம் வகுத்துக் கொள்ளாமல் அவர்களுடைய வாழ்க்கை முறைக்கும் இலக்கணம் வகுத்துக் கொண்டு வாழ்ந்த பெருமைக்குரியவர்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கு நிலங்களில் வாழ்ந்த மக்கள் உழைத்துப் பொருள் ஈட்டுவர், காதலிப்பர், மணமுடிப்பர், இல்லறவாழ்வில் இணைந்து இன்பமுறுவர், மக்கட்பேறு அடைவர். இவ்வாறு சங்ககாலத் தமிழர் இல்லறவாழ்க்கையைப் பெரிது போற்றினர்.

**"இல்லறம் அல்லது நல்லறம் அன்று"**

என்று ஔவையார் கொன்றை வேந்தனில் குறிப்பிடுவது போல இல்லற வாழ்வில் சிறந்து விளங்கினர். இத்தகைய இல்லற மாண்பினைக் கொண்ட தமிழரின் வாழ்வியல் நிலையைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக எடுத்துக்காட்டுவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கம்.

## உவமை காட்டும் இல்லறம்

ஐங்குறுநூற்றில் வரும் பாடல்கள் சிலவற்றில் புலவர்கள் உவமையின் வழியாகப் பழந்தமிழரின் இல்லறத்தின் தன்மையை எடுத்துக்காட்டியுள்ளனர் எனலாம். சான்றாக,

# பன்முக நோக்கில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்


பதிப்பாசிரியர்கள் :

கலைமாமணி, முனைவர் **வி.முத்து**

பேரா. **இரா.ஏழுமலை**




13. திருக்குறள் - பாயிரத்தில் வேற்றுமைத் தொடர்

சி. இளங்கோ 68

14. நாலடியாரில் தனிமனிதப் பண்பு

முனைவர் ந. உமா 73

15. பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் கல்வி மேலாண்மைச் சிந்தனைகள்

பா. உமா சங்கரி 78

16. பழமொழி நானூறு உணர்த்தும் வாழ்வியல் அறங்கள்

ச. உமாதேவி 83

17. ஆசாரக் கோவையும் அரசியல் பின்புலமும்

இரா. ஏழுமலை 88

18. திருக்குறள் காட்டும் இல்லறச் சிறப்பு

வெ. கண்ணன் 94

19. திரிகடுகம் காட்டும் மருத்துவம்

பா. கல்பனா 98

20. திரிகடுகம் காட்டும் தனிமனித அறம்

முனைவர் சி. கலியம்மாள் 103

21. கார்நாற்பதில் தலைவன் தலைவி பிரிவு

இரா. கலையரசி 107

22. மருந்துப் பொருள்களின் பெயர்களால் அமைந்த பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

ஏ. கவிதா 110

23. கோட்பாட்டியல் நோக்கில் ஆசாரக்கோவை

முனைவர் நா. காயத்ரி 115

24. திருவள்ளுவரின் உலகச் சிந்தனை

முனைவர் ந. கிருட்டினமூர்த்தி 119

25. திரிகடுகம் காட்டும் பெண்

க. கிருஷ்ணம்மாள் 124

26. சிறுபஞ்சமூலத்தில் வாழ்வியல் நெறிகள்

திருமதி ச. கிருஷ்ணகுமாரி 129

## நூற்குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | பன்முக நோக்கில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் |
| பதிப்பாசிரியர் | கலைமாமணி, முனைவர் வி. முத்து<br>பேரா. இரா. ஏழுமலை |
| முதல் பதிப்பு | 2018 |
| தாள் | 18.6 மை லை மேப்லித்தோ |
| அளவு | 1/8 டெம்மி |
| எழுத்து | 11.5 புள்ளி |
| பக்கம் | 490 |
| நூல் கட்டமைப்பு | இயல்பு |
| விலை | 250 |
| படிகள் | 1000 |
| நூல் வடிவமைப்பு | சே. சீனிவாசன் |
| அட்டை வடிவமைப்பு | ஓவியர் மதிராஜ் |
| அச்சிட்டோர் | சரவணா கிராபிக்ஸ் |
| ISBN | 978-81-923186-3-9 |
| பதிப்பகம் | ஜெயப்பிரியா பதிப்பகம்<br>79, மரக்காணம் சாலை<br>நாகலாபுரம்<br>திண்டிவனம் 604 001 |


## பதிப்புரை


பேரா. இரா. ஏழுமலை,
முதல்வர் (பொ),
இராஜா நந்திவர்மன் கலை, அறிவியல் கல்லூரி,
தெள்ளாறு


தமிழிலக்கியங்களில் காலந்தோறும் இலக்கியப் பொருண்மைகளும் பாடும் முறைகளும் பாடிய வண்ணமே அமைந்து வருகின்றன. இவற்றைப் பற்றிய ஆய்வுப் பார்வைகளும் அணுகுமுறைகளும் பல நிலைகளில் வளர்ச்சி பெற்று வந்துள்ளன. என்றாலும் மற்ற இலக்கியங்களைக் காட்டிலும் அதிகமாக ஆய்வுக்கு உட்படுத்தப்படாமல் இருப்பது நீதி இலக்கியங்கள் என்று சுட்டப்படும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஆகும். ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் தவிர்த்து பெரும்பாலும் பதினெண்கீழ்க்கணக்கில் அதிகமான ஆய்வுகள் நிகழ்த்தப் பெறவில்லை. என்றாலும் ஆங்காங்கு நடைபெறும் கருத்தரங்க நிகழ்வுகளும் இவ்வாய்வை வளர்ப்பதில் பங்கெடுத்துக் கொள்கின்றன என்பதை மறுக்க இயலாது.

தெள்ளாறு எறிந்த மூன்றாம் நந்திவர்மனின் பெயரைத் தாங்கிய இராஜா நந்திவர்மன் கலை, அறிவியல் கல்லூரி என்னும் இக்கல்லூரியின் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் பன்முக நோக்கில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் எனும் தலைப்பில் கருத்தரங்கம் ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளனர். பல கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்களிடமிருந்து பல்வேறு பொருண்மைகளில் ஆய்வுக்கட்டுரைகள் பெறப்பட்டு அவற்றுள் 99 கட்டுரைகள் மட்டும் தேர்வு செய்யப்பட்டு நூல் வடிவாக வந்துள்ளது. இந்நூல் தமிழாய்வு உலகிற்கு மேலும் சேர்க்கும் வண்ணம் அமைந்துள்ளது.

இக்கட்டுரைத் தொகுப்பில் அரசியல், அறிவியல், உளவியல், உழவியல், கோட்பாட்டியல், கல்வி, காதல், இல்லற மாண்புகள், தனி மனித அறம், உவமை, தொடையமைதி, [illegible] [illegible]

மக்களின் அறியாமையை நீக்கி மன மாசுக்களை அகற்றி வாழ்வில் வெற்றி பெற்று நற்கதி அடைய இவை கலங்கரை விளக்கம்போல வழி காட்டுகிறது.

**முடிவுரை**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களான ஏலாதி, திரிகடுகம், சிறுபஞ்சமூலம் ஆகியவை மிகச் சிறந்த அறநூல்களாகும். ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு மாணவ, மாணவியர்களும் பயில வேண்டிய அறநூல்களாகும் இம்மூன்றும். இவற்றில் அமைந்துள்ள உவமை நயம், பொருள் நயம், சொல் நயம், அணி நயம் ஆகியவை கருத்துக்களும் வெளிப்படுகிறது.

*சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்*
*நீதி வழுவா நெறிமுறையில் - இட்டார்*
*பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர்*
*பட்டாங்கில் உள்ளபடி*

என்ற ஔவையாரின் பாடலுக்கு ஏற்ப சாதி, மத, இனப் பாகுபாடுகள் இன்றி மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாழ வழிகாட்டுகிறது. இம்மூன்று நூல்களின் பெருமையைச் சொல்லில் அடக்க இயலாது. ஏலாதி, திரிகடுகம், சிறுபஞ்சமூலம் என்ற இம்மூன்று நூல்களையும் தெளிவாகக் கற்போர் வாழ்க்கையில் வெற்றி பெற்று என்றென்றும் சிறப்புற வாழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.

வாழ்க தமிழ்நாடு! வளர்க தமிழ்மொழி!!

முனைவர் நா. கணபதி
துணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
தாகூர் கலைக் கல்லூரி
புதுச்சேரி

# கோட்பாட்டியல் நோக்கில் ஆசாரக்கோவை

தமிழரது வாழ்வியல், முறைப்படுத்தப்பட்ட நெறிகளையும் கோட்பாடுகளையும் தன்னகத்தே கொண்டு தமிழர்களது அறவியல் கொள்கைகள் சிறந்தனவாகவும், மேன்மையானவாகவும் அமைந்துள்ளன. மனிதன் தன் அகமும், செயல்களில் ஒழுக்கமும் முறைமையும் சிறந்து சமூக ஆளுமையுடனும் சான்றாண்மையுடனும் வாழவேண்டியது அவசியமாகிறது.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் அன்றாட வாழ்வியல் நெறிமுறைகளை கூறுகின்ற நூல் ஆசாரக்கோவை ஆகும். இந்நூலின் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார். வாழ்வியல் சார்ந்த கோட்பாட்டியல் நோக்கில் ஆசாரக்கோவை என்ற அறநூலை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆசாரக்கோவையின் அடிப்படைக்கூறு**

ஆசாரம் என்றால் நன்முறையில் ஒழுக்கத்துடன் நடத்தல் என்பது பொருள் ஆகும். அதாவது உள்ளும் புறமும் சான்றோர் நெறிப்படி தூய்மையாக இருத்தல் ஆகும்.

*ஆசாரம் என்பது கல்வி*

என்னும் நான்மணிக்கடிகையின் தொடர் வாழ்வின் முறைகளை, நெறிகளை, பழக்கவழக்கங்களைக் கற்று அதன்படி ஒழுகுதல் என்பதைக் குறிக்கிறது.

ஒழுக்கம் இருவகையாகக் கூறப்படுகிறது. ஒன்று அன்றாடம் உள்ள நடைமுறையைப்பற்றியது. மற்றொன்று மேற்கொள்ளத்தக்கும் ஒழுக்கம் எனப்படும். இந்நூலில் சுகாதாரம், தெய்வ வழிபாடு, கொள்ளத்தகும் அறம், நீக்கத்தகும் செயல்கள், மகளிர் கடமை, பெரியோரிடம் ஒழுகும் முறை, மனைவியின் கடமை, உடன்பட வழக்குகள் எனப் பல செய்திகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

# தமிழ் இலக்கியங்களில் மானுட மேன்மை

## கருத்தரங்க ஆய்வுக்கோவை

## 2018



தமிழ்த்துறை

காஞ்சிமாமுனிவர் பட்டமேற்படிப்பு மையம்

(உயர்தகுதித் தன்னாட்சி ஆய்வு நிறுவனம்)

புதுச்சேரி அரசு


விழிச்சுடர்ப் பதிப்பகம்

காரைக்கால்

நூல் விவரம்

தலைப்பு : தமிழ் இலக்கியங்களில் மானுட மேன்மை

பொருள் : மானுட மேன்மை குறித்த ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு

பக்கங்கள் : 160

பதிப்புரிமை : தமிழ்த்துறை

அச்சாக்கம் : விழிச்சுடர்ப் பதிப்பகம்
"நீக்கி சோலை"
புதுத்துறை சாலை, காரைக்கால் 609 602
அலை 93450 05865

பன்னாட்டு நூல்

தரக்குறியீட்டு எண் ISBN 978-93-80366-39-5

## உள்ளுறை

1. முனைவர் அந்தோணி சகாய சோபியா. ஜே.

அற இலக்கியங்களில் மானுடமேம்பாட்டுச் சிந்தனைகள் 12

2. திருமதி அமுதவள்ளி, க.

மானுட மேன்மைக்குப் புறநானூறு 16

3. முனைவர் அருள் செல்வி, ஆ.

திருமந்திரம் வெளிப்படுத்தும் மானுடச் சிந்தனைகள் 20

4. திருமதி அனந்தலட்சுமி ஹேமலதா

பெண்கள் சூழ்நிலைக் கைதிகளா? சந்தர்ப்பவாதிகளா? 23

5. முனைவர் ஆனந்தி, கா.

பண்பாட்டு மானுடவியலில் ஐங்குறுநூறு 27

6. முனைவர் இளங்கோ, சிவ.

இந்தியச் சிந்தனை மரபும் - தமிழிலக்கியத்தின் கொடையும் 30

7. முனைவர் இளங்கோ, நா.

கம்பதாசன் கவிதைகளில் மானுடமேன்மை 35

8. உமாமகேஸ்வரி, நா.

ஆன்மீக இலக்கியங்களில் அகப்புறப் பற்று 40

9. முனைவர் கல்பனாதேவி, தி.

சங்க இலக்கியத்தில் மானுடம் 44

10. முனைவர் காயத்ரி, நா .

புறநானூற்றில் மானுட மேன்மை 50

11. திரு. கார்த்திகேயன், பால.

சு.தமிழ்ச்செல்வி நாவல்களில் பெண்களுக்கான மேன்மை வெளிப்பாடு 53

12. முனைவர் கிரிஜா, ஜா.

தமிழ் இலக்கியங்களில் மானுட மேம்பாட்டுச் சிந்தனைகள் 57

13. முனைவர் கிருட்டினகுமார், ம.ஏ.

திருக்குறள் அதிகார வைப்புமுறையில் மானுட மேன்மை 60

14. முனைவர் கிருட்டினமூர்த்தி, ந..

கவிஞர் ஔவை நிர்மலாவின் கவிதைகளில் சமகாலச் சிக்கல்கள் 65

15. திரு. கிருஷ்ணராஜ், த.

மானுட மேன்மைக்குச் சங்க இலக்கியம் காட்டும் நட்பு 71

16. முனைவர் கொழந்தசாமி, ப.

மானுட மேன்மைக்கு அறப்பளீசுர சதகம் 74

17. முனைவர் கோவிந்தம்மாள், வா.வெ.

ஆற்றுப்படை நூல்களில் திணைசார் மக்களின் மானுட மேன்மை 78

18. முனைவர் சம்பத், இரா.

புலமை உருவாக்க மேலாண்மை 83

# புறநானூற்றில் மானுட மேன்மை

முனைவர் நா. காயத்ரி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தாகூர் அரசு கலை, அறிவியல் கல்லூரி
புதுச்சேரி

இன்றைய கணினி உலகத்தில் காலம் வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது. புதுமைகள் பல தோன்றுகின்றன. பண்புகள் மாறுகின்றன. பழக்க வழக்கங்கள் வேறுபட்டுள்ளன. நாட்டிலுள்ள ஒவ்வொரு மனிதனும் மனிதநேயத்துடன் திகழ்ந்தால் நம்மிடையே வேற்றுமைகள் தோன்றா. இன்றைய சமூகத்தின் நிலைக்களன்களாக விளங்குவன தமிழ் இலக்கியங்கள். இலக்கிய படைப்பு எனப்படுவது மானிட உணர்வுகளைத் தூண்டிவிட்டு அவைகளின் வாயிலாக மானிடப் பண்பை மேன்மை செய்யும் அழகியல் ஆயுதமாக இருத்தல் வேண்டும். அன்றைய இலக்கியங்களில் மனிதநேயம் பாடுபொருளாக இருந்ததை நாம் அறியலாம்.

சங்ககாலத் தமிழ்ப் புலவர்கள் மக்களின் வாழ்வில் இடம்பெற்ற நல்லியல்புகளையே தம் பாடல்களில் பாராட்டியுள்ளனர். தீமை செய்வோர் வேந்தராயினும் அஞ்சாது இடித்துரைத்து அவர்களைத் திருத்தினார்கள். மானுடம் தழுவிய மனிதராய் வாழும் வழிவகைகளைத் தமது பாடல்களின் ஊடாக அரசர்களுக்கும் மக்களுக்கும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள் என்ற செய்தி புறநானூற்றின் வழியாக அறியப்படுகிறது. இத்தகைய சிறப்புப் பொருந்திய புறநானூற்றில் அமையும் மானுட மேன்மை பற்றி இக்கட்டுரையில் சுருங்கக் காணலாம்.

**மானுட மேன்மை**

மானுடம் என்பது நேர்மை, சோர்வின்மை, நீதி, தருமம் முதலான பண்புகளுக்கு இலக்கணமாக அமைவது. இயற்கை மாறினும் நாட்டின் சட்ட திட்டங்கள் மாறினும் அரசியல்-அதிகாரம் முதலியன தாக்கங்களை ஏற்படுத்திய போதிலும் தன்னிலை மாறாதிருப்பதே மானுடத்தின் மாண்பு.மானுடம் மனித நேயத்துடன் தொடர்பு உடையது.மானுடம் என்பது நட்பு, அன்பு என்பவற்றை உயிரோட்டமாகக் கொண்டது.புலவர்கள் மானுடம் நிலைத்தோங்கத் தக்க வகையில் மன்னர்களை நெறிப்படுத்தினர்.மன்னர்கள் புலவர்கள் மீது கொண்டிருந்த மதிப்பும் நட்பும் அவர்களை மானுடத்தைப் போற்றி மதிக்கச் செய்தன.

**நீதி வழுவாமை**

அறம் என்பது மானுட நீதி.அறம் தவறினால் மக்கள் மாக்களாக மாறிவிடுவர்.அரச நெறிக்கும் அறமே முதன்மையானது. அறநெறி போற்றும் நீதிமுறைகளில் அரசு தவறுமாயின் அதன் கொற்றம் அழிந்து விடும். நமர்-தமர் பாராது அரசு நீதி செலுத்துதல் வேண்டும். நீதி செலுத்தும் போது ஆண்மையும் தண்மையும் வண்மையும் என்ற பண்புகள் மிளிர வேண்டும். இப்பண்புகள் யாவும் கைவரப்பெற்று ஆட்சி செய்க எனப் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை மதுரை மருதனிளநாகனார் பாடுதல் நோக்கத்தக்கது. அப்பாடல் வருமாறு:

அறநெறி முதற்றே அரசின் கொற்றம்
அதனால் நமரெனக் கோல்கோ டாது
பிறர்எனக் குணங் கொல்லாது
ஞாயிற் றன்ன வெந்திறல் ஆண்மையும்
திங்கள் அன்ன தண்பெருஞ் சாயலும்
வானத்து அன்ன வண்மையும் மூன்றும்

# இலக்கியவியல், இலக்கணவியல் நோக்கில் திருக்குறள்

ஆய்வுத் தொகை - 2019



முனைவர் தி. செல்வம்
முனைவர் சிவ. மாதவன்
முனைவர் ப. கொழுந்தசாமி
முனைவர் நா. காயத்ரி

# நூல் விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| பெயர் | : | இலக்கியவியல், இலக்கணவியல் நோக்கில் திருக்குறள் |
| ஆசிரியர்கள் | : | முனைவர் தி. செல்வம்<br>முனைவர் சிவ. மாதவன்<br>முனைவர் த. கொழந்தசாமி<br>முனைவர் நா. காயத்ரி |
| பதிப்பு | : | மார்ச் 2020 |
| விலை | : | 200 |
| உரிமை | : | ஆசிரியர் |
| பக்கம் | : | 110 |
| வெளியிடுவோர் | : | செம்மொழித் தமிழ் ஆய்வு மையம்<br>புதுச்சேரி. |
| ISBN | : | ARN#.2886/ISBN/2020/A |
| வடிவமைப்பு | : | ரா. விக்னேஷ், 9944559695 |
| அச்சிட்டோர் | : | நண்பர்கள் அச்சகம்,<br>நெல்லிக்குப்பம் |

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | அன்புடைமை | 1 |
| 2. | திருக்குறள் அரணியலில் வேற்றுமைத் தொடரும் அல்வழித் தொடரும் | 4 |
| 3. | திருக்குறள் இலக்கியம் காட்டும் இல்லறப் பண்புகளும் நலன்களும் | 8 |
| 4. | திருக்குறள் களவியலில் எதுகை | 21 |
| 5. | திருக்குறள் பாயிரத்தில் அல்வழித் தொடர் | 24 |
| 6. | திருக்குறள் பாயிரத்தில் ஐவகைச் சொற்கள் | 27 |
| 7. | திருக்குறள் களவியலில் மோனை | 33 |
| 8. | திருக்குறள் பாயிரத்தில் வேற்றுமைத் தொடர் | 38 |
| 9. | திருக்குறள் வழி அருள் | 41 |
| 10. | திருக்குறளில் கடவுள் வழிபாடும் தெய்வ வழிபாடும் | 45 |
| 11. | திருக்குறளில் கைக்கிளை | 49 |
| 12. | தொடரமைப்பியல்வழி வள்ளுவத் தெளிவு | 53 |
| 13. | தொல்காப்பியப் பொருளதிகாரமும் திருக்குறளும் | 61 |
| 14. | பாடுபொருள் நோக்கில் திருக்குறளும் அழகர் அந்தாதியும் | 71 |
| 15. | வள்ளுவரின் அறத்துப்பாலும் பிரபஞ்சனின் சிறுகதையும் | 78 |
| 16. | விரிவாம் உவமை அணி இலக்கணவியல் நோக்கில் திருக்குறள் | 83 |
| 17. | விருந்தோம்பல் | 87 |
| 18. | விருப்பில் திருக்குறள் சொல்லாட்சித் திறன் | 91 |
| 17. | Universal Thoughts Thiruvalluvar | 95 |

# திருக்குறளில் கைக்கிளை

முனைவர் நா.காயத்ரி,

உதவிப்பேராசிரியர்,

தாகூர் அரசு கலைமற்றும் அறிவியல் கல்லூரி,

புதுச்சேரி.

திருக்குறளில் அமைந்துள்ள காமத்துப்பால், தொல்காப்பியர், முதலியோர் தந்த இலக்கணத் தொல்நூல்களும், நற்றிணை, குறுந்தொகை முதலிய சங்க இலக்கியங்களும் கூறும் அகப்பொருள் மரபுகளின் பிழிவாகத் திகழ்கிறது. இதில் களவு, கற்பு எனத் தலைவன், தலைவியின் இல்வாழ்க்கை உலக வழக்கொடு பொருந்தச் சித்தரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். பண்டைய தமிழ் மரபுப்படி இலக்கியங்களை அகம், புறம் என இருவகையாகப் பகுப்பர். அம்முறையில் காமத்துப்பால் அகம் சாரந்த பகுதியாக அமைந்துள்ளது.

'கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்

முற்படக் கிளந்த எழுதிணை என்ப' (தொல். அகம். 1)

எனத் தொல்காப்பியம் அகத்திணைகள் ஏழு எனக் குறிப்பிட்டுள்ளது. இவ் அகத் திணைகள் ஏழும் திருக்குறளில் அமைந்துள்ள காமத்துப் பாலில் தெள்ளத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளதைக் காணலாம். காதலின் தொடக்க நிலையாகிய கைக்கிளையைத் திருவள்ளுவர்; காமத்துப்பாலில் தகையணங்குறுத்தல் என்ற அதிகாரத்துள் உள்ளடக்கி இருப்பதைக் காணலாம். தொல்காப்பியம் உணரத்தும் கைக்கிளைக் குறிப்புகள் அனைத்தும் தகையணங்குறுத்தல் அதிகாரத்தில் வரும் குறள்களோடு பொருந்திவரும் பான்மையை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தொல்காப்பியத்தில் கைக்கிளை

தொல்காப்பியர் கைக்கிளையை விளக்கும்போது,

'காமஞ் சாலா இளமை யோள்வயின்

ஏமஞ் சாலா இடும்பை எய்தி

தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்